## பிரிவு – 7

### மாவட்டப் பஞ்சாயத்து

**2.7.1.** தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்டப் பஞ்சாயத்தை ஏற்படுத்த வகை செய்கிறது. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகள் மீது மாவட்டப் பஞ்சாயத்து அதிகார வரம்பைக் கொண்டுள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 73 ஆம் திருத்தத்தில் கருதப்பட்டவாறு, இது ஊரக உள்ளாட்சி மன்றங்களின் முதல் உயர் அடுக்காகும். இதன்படி தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சித்துறையின் 13.4.1995 ஆம் நாளிட்ட 100 ஆம் எண் அரசாணையில், அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டப் பஞ்சாயத்துக்களை அமைத்துள்ளது. மாவட்ட ஆட்சியர்கள் தனி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட ஊரக வளர்ச்சி முகவரமைப்பின் திட்ட அதிகாரி, தலைமை நிருவாக அதிகாரியாகவும் தற்போது பொறுப்பு வகித்து வருகிறார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகவரமைப்பால் செயல்படுத்தப்பட்டு வந்த வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட திட்டங்களை அரசு மாவட்ட பஞ்சாயத்துக்களுக்கு மாற்றியுள்ளது. மாவட்ட பஞ்சாயத்துக்கள், ஓர் ஆலோசனை அமைப்பே ஆகும். ஊராட்சி ஒன்றியங்களிலும் ஊராட்சிகளிலும் செயற்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பது அரசுக்கு ஆலோசனை தேவைப்படுகின்ற விவகாரங்களில் ஆலோசனைகளை அளிப்பதும் இதன் பணியாகும். எனினும், இந்த அரசாணை வேலை வாய்ப்பை நோக்கமாகக் கொண்ட திட்டங்களைக் கண்காணிக்கும் பணியையும் மாவட்டப் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்து, மாவட்ட வளர்ச்சி முகவரமைப்பின் நிருவாகக் கட்டுப்பாட்டில் பணியாற்றும் அலுவலர் மற்றும் பணியாளர்களையும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தைச் சார்ந்த சில அலுவலர்களையும் அதன் பொறுப்பில் விட்டுள்ளது. திட்டங்களைச் செயல்படுத்துவது தொடர்பான அனைத்துச் செலவுகளையும், பணியாளர் குறித்த செலவுகளையும் மாவட்ட பஞ்சாயத்துக்களின் பொது நிதியில் பற்றெழுத வேண்டும் என்றும் மாவட்டப் பஞ்சாயத்துக்களின் பொது நிதிக்கு, மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே கூடுதல் நிதி அளிக்க வேண்டும் என்றும் அரசாணையின் 12வது பத்தி குறிப்பிடுகிறது.

**2.7.2.** அரசியலமைப்பு 73வது திருத்தச் சட்டத்தின் 11 ஆம் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டு, தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தில் உரியவாறு சேர்க்கப்பட்டுள்ள 29 இனங்களைப் பொறுத்தவரையில், மாவட்டப் பஞ்சாயத்துக்களின் பங்கு, மாவட்டப் பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் குறித்தும் இதுவரையில் முடிவு செய்யப்படவில்லை. தற்போதைய நிலவரப்படி மேற்சொன்ன அரசாணையில் மாற்றம் செய்யப்பட்ட ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட திட்டப் பணிகளை மாவட்டப் பஞ்சாயத்துக்கள் செயல்படுத்தும். இத்தகைய திட்டப் பணிகளைப் பொறுத்தமட்டில் திட்டங்களுக்கும், சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கும் செலவிற்காக வரவு – செலவுத் திட்டத்தில் ஏற்கனவே நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, தற்போது அரசு செய்து வருகின்ற மாவட்ட ஒதுக்கீடுகளின்படி, இத்தொகை முழுவதும் மாவட்டப் பஞ்சாயத்துக்களின் பொது நிதியைச் சென்றடையும். மாவட்டப் பஞ்சாயத்து பொது நிதிக்குக் கூடுதலாகக் தொகை ஒதுக்குவதைப் பொறுத்தவரையில், உள்ளாட்சி மன்றங்களுக்கு மாநில அரசு வழங்கும் மொத்த ஒதுக்கீடுகளில் மாநில

நிதி ஆணையம் தெரிவித்த கோட்பாடுகளின்படி, நகர்ப்பகுதி, ஊரகப்பகுதி ஆகியவற்றிடையே அத்தகைய ஒதுக்கீட்டைப் பகிர்ந்தளித்த பிறகு, மாவட்டப் பஞ்சாயத்துக்களின் செலவிற்குத் தேவையான தொகை ஊரக ஒதுக்கீட்டிலிருந்து நிறுத்தி வைத்துக் கொள்ளப்படலாம் என்றும், எஞ்சிய தொகை ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஊராட்சிகளுக்கும் மாநில நிதி ஆணையம் தெரிவித்த கொள்கைகளின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படலாம் என்றும் மாநில நிதி ஆணையம் கருதுகிறது. மாவட்ட பஞ்சாயத்துக்களுக்கென ஒதுக்கி வைக்கப்பட்ட தொகை, ஒரு மொத்த மானியமாக பகிர்ந்தளிக்கப்படும். இந்த அடிப்படையில், ஒரு மாவட்டப் பஞ்சாயத்திற்குத் தேவைப்படும் உத்தேச செலவுத்தொகை கணக்கிடப்பட வேண்டும். இது மாவட்டப் பஞ்சாயத்தின் பங்கு பணி பற்றி அரசு எடுக்கும் முடிவை அடிப்படையாகக் கொண்டே அமையும். எனினும், ஊரக வளர்ச்சி இயக்குநர், பணியாளர்களின் தேவை குறித்து சில குறியீடுகளை அளித்துள்ளார். இதன் அடிப்படையில், 1997–98 ஆம் ஆண்டிற்கான பணியாளர் தேவை மதிப்பிடப்பட்டு இதற்கு ரூ.21 இலட்சமாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 2001–2002 வரையிலான அடுத்துவரும் ஆண்டுகளுக்கான மதிப்பீடுகளும் அளிக்கப்பட்டுள்ளன. ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஏனைய வேலைவாய்ப்புத் திட்டங்களின் கீழ்வரும் பணியாளர்கள், இந்த மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆனால், அவர்களுக்கான நிதியொதுக்கம் ஏற்கனவே சம்பந்தப்பட்ட அரசின் வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டு, அவை ஏற்கனவே மாவட்டப் பஞ்சாயத்துக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகத் தோன்றுகிறது. இதற்கு மேலும் இந்தப் புதிய அமைப்பிற்குக் கூடுதலாகத் தேவைப்படும் தொகை குறித்து தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. இருப்பினும், அரசு அண்மையில் மாவட்டப் பஞ்சாயத்து ஒவ்வொன்றுக்கும் 1996–97 ஆம் ஆண்டிற்காக ரூ.1/- கோடி வழங்கியுள்ளது. இதனை வழிமுறை குறிப்புகளாகக் கொண்டு, மாவட்டப் பஞ்சாயத்துக்களுக்கு ஒட்டு மொத்த மானியத்தைப் பகிர்ந்தளிப்பது குறித்து இந்த அறிக்கையின் பகுதி V- ல் விவாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், உண்மையான தேவைகளை நிறைவு செய்ய, மாவட்டப் பஞ்சாயத்துக்களுக்கு உள்ளூர் செஸ்வரியில் ஒரு பங்கையும் ஒரு மொத்த மானியத்தையும் ஒப்படை செய்யுமாறு தெரிவித்த கருத்துக்களை தற்சமயத்திற்கு மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளாகக் கொள்ளலாம். பணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு, மாவட்டப் பஞ்சாயத்து அலுவலகத்தின் புதிய அமைப்பு முறை தெரியவந்த பிறகு, ஊரகப் பகுதிகளுக்கான மொத்தத் தொகுப்பிலிருந்து தேவையான தொகை ஒதுக்கப்படலாம்.

### 2.7.3. பரிந்துரைகள்

மாநில நிதி ஆணையம் பின்வருமாறு பரிந்துரைக்கிறது.

> உண்மையான தேவைகளை நிறைவு செய்வதற்காகவே அரசு, மாவட்டப் பஞ்சாயத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் 1996–97 இல் ரூ.1/- கோடி வழங்கியுள்ளதை வழிமுறைக் குறிப்புகளாகக் கொண்டு, மாவட்டப் பஞ்சாயத்துக்களுக்கு உள்ளூர் செஸ் வரியையும், ஒரு மொத்த மானியத்தையும் ஒப்படை செய்யுமாறு தெரிவித்த கருத்துக்களை தற்சமயத்திற்கு மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளாகக் கொள்ளலாம். பணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு, மாவட்டப் பஞ்சாயத்து அலுவலகத்தின் புதிய அமைப்பு முறை தெரிய வந்த பிறகு, ஊரகப் பகுதிகளுக்கான மொத்தத் தொகுப்பிலிருந்து மேற்கொண்டும் தேவைப்படும் நிதி ஒதுக்கப்படலாம்.